# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.182/2023

### அ.சா. 7 (LW 10 )

| **பெயர்** | **திரு. செல்வம்** | **தொழில்** | **கிராம நிர்வாக அலுவலர்** |
|---|---|---|---|
| **த/க பெயர்** | அய்யப்பன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **16.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 9 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது செங்குறிச்சி கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.05.2023 அன்று கம்பிளியம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது கூடுதலாக கணவாய்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பொறுப்பில் இருந்து வந்தேன். கணவாய்பட்டி கிராமத்தில் சக்கிலியன்கொடையில் கண்ணன் என்பவருக்கு சொந்தமான கொய்யாத்தோப்பில் உள்ள ஆவி மரத்தில் கண்ணன் என்பவர் முகத்திலும், நெற்றியிலும் காயத்துடன் தூக்கில் தொங்குவதாக எனக்கு தகவல் கிடைத்தது. நானும் எனது கிராம உதவியாளர் சரவணன் என்பவரும் அங்கு சென்று பார்த்தோம். அதன்பின 16.05.2023 அன்று கோபால்பட்டி பஸ்ஸ்டாப் அருகில் காலை 10.00மணிக்கு வழக்கில் சம்மந்தப்பட்ட அழகர்சாமி த/பெ. சின்னக்காளை, சின்னக்காளை த/பெ. அழகன், சதீஷ்குமார் த/பெ. முருகன், முருகன் த/பெ. வெள்ளைச்சாமி , ஆகிய 4 பேரையும் காவல் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் வாங்கி கொண்டிருந்தார். அப்போது 4 பேர்களும் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதில் அழகர்சமி என்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் கணவாய்ப்பட்டி கிராமம், கொரசின்னம்பட்டி , அழகர்சாமி என்பவர் தனது வீட்டின் முன்பாக TN 57 BA–5605 என்ற Hero honda splender வாகனத்தை எடுத்து 10.30மணி அளவில் எடுத்து ஆஜர்படுத்தினார். அதை ஆய்வாளர் அத்தாட்சியில் பதிவு செய்து கொண்டார். 1வது எதிரி கொடுத்த அழகர்சாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.5**. ஆகும். அத்தாட்சி **அ.த.சா.ஆ.6.** ஆகும். அதில் நானும் எனது கிராம உதவியாளரும் கையெழுத்திட்டோம். 1வது எதிரியிடமிருந்து TN 57 BA–5605 என்ற Hero honda splender வாகனம் **சா.பொ.1**.ஆகும். பின்பு 2வது எதிரி சின்னக்காளை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.7.** ஆகும். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சின்னக்காளை காலை 11.30மணிக்கு எதிரி முருகன் வீடு அருகே எடுத்து ஆஜர் செய்த 4 கைலி, இரண்டு முழுக்கை

சட்டை, ஒரு வெள்ளை நிற முழு பனியன் ஆகியவற்றை எதிரி சின்னக்காளை எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும் எனது கிராம உதவியாளரும் கையெழுத்திட்டோம். எதிரி எடுத்து ஆஜர் செய்த வெள்ளை கலர் திக் புளு மற்றும் லைட்புளு கலர் கலந்த சிகப்பு மற்றும் புளு கலர் கோடு கட்டம் போட்ட கைலி ஒன்று , வெள்ளை திக் புளு மற்றும் லைட் புளு கலர் கோடு போட்ட முழுக்கை சட்டை ஒன்று, SKC என்று எழுதப்பட்ட வெள்ளை கலர் உள் பனியன் ஒன்று , புளு வெள்ளை கருப்பு கலர் கலந்த கட்டம் போட்ட கைலி ஒன்று , RADO என எழுதப்பட்ட கருப்பு கலரில் கட்டம் போட்ட ஸ்கை புளு கட்டம் போட்ட முழுக்கை சட்டை ஒன்று, பச்சை, வெள்ளை, காப்பி கலர் , நேவி புளு கலர் கட்டம் போட்ட கைலி ஒன்று, நேவிபுளு திக் புளு, வெள்ளை கருப்பு கலரில் கட்டம் போட்ட சாம்பல் நிற கைலி ஒன்று, ஆகியவற்றை ஆய்வாளர்அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.8.**ஆகும். வெள்ளை கலர் திக் புளு மற்றும் லைட்புளு கலர் கலந்த சிகப்பு மற்றும் புளு கலர் கோடு கட்டம் போட்ட கைலி ஒன்று **சா.பொ.2**. ஆகும். , வெள்ளை திக் புளு மற்றும் லைட் புளு கலர் கோடு போட்ட முழுக்கை சட்டை ஒன்று **சா.பொ.3**. ஆகும். SKC என்று எழுதப்பட்ட வெள்ளை கலர் உள் பனியன் ஒன்று **சா.பொ.4**. ஆகும். , புளு வெள்ளை கருப்பு கலர் கலந்த கட்டம் போட்ட கைலி ஒன்று **சா.பொ.5**. ஆகும். , RADO என எழுதப்பட்ட கருப்பு கலரில் கட்டம் போட்ட ஸ்கை புளு கட்டம் போட்ட முழுக்கை சட்டை ஒன்று **சா.பொ.6**. ஆகும்., பச்சை, வெள்ளை, காப்பி கலர் , நேவி புளு கலர் கட்டம் போட்ட கைலி ஒன்று **சா.பொ.7**. ஆகும்., நேவிபுளு திக் புளு, வெள்ளை கருப்பு கலரில் கட்டம் போட்ட சாம்பல் நிற கைலி ஒன்று **–சா.பொ.8**. ஆகும்.

எதிரி சதீஷ்குமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மதியம் 03.30மணி அளவில் எதிரி வீட்டின் அருகில் எடுத்து ஆஜர் செய்த கருப்பு , மஞ்சள் கலர் நைலான் கயிறு ஒன்றை டாடா எசி வண்டியின் மேல் பகுதியிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் அத்தாட்சியிலும் நானும் எனது உதவியாளரும் கையெழுத்து செய்தோம். எதிரி சதீஷ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.9**. ஆகும். எதிரி சதீஷ்குமார் எடுத்து ஆஜர் செய்த கருப்பு மஞ்சள் நிற நைலான் கயிறுகள் இரண்டையும் சேர்த்து முடியப்பட்ட முடிச்சுகளுடன் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.10** ஆகும். கருப்பு மஞ்சள் நிற நைலான் கயிறுகள் இரண்டையும் சேர்த்து முடியப்பட்ட முடிச்சுகளுடன் உள்ளது **சா.பொ.9**. ஆகும். என் முன்பாக ஆய்வாளரிடம் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்த எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். இடது புறத்திலிருந்து முதலில் உள்ளவர் 1வது எதிரி அழகர்சாமி ஆவார். 2வது நிற்பவர் சின்னக்காளை ஆவார். 3வது நிற்பவர் சதீஷ்குமார் ஆவார். 4வதாக நிற்பவர் முருகன் ஆவார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சமயத்தில் நான் கணவாய்ப்பட்டி சக்கிலியன் கொடை கிராமத்தின் கூடுதல் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக இருந்தேன். நான் இறந்து கிடந்தவரை பார்த்ததாக சொல்லும் நேரம் 14.05.2023 அன்று மாலை 04,00மணி ஆகும். நான் போன சமயத்தில் சாணார்பட்டி போலிசார் அங்கு இருந்தார்கள். எனக்கு ஆய்வாளர்,

சிறப்பு சார்பு ஆய்வாளர்,சார்பு ஆய்வாளர், தலைமை காவலர்வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியாது. 14.05.2023 அன்று மாலை 04,00மணிக்கு நான் போய் பார்த்த போது எந்த போலிசார் இருந்தார்கள் என்று எனக்கு சரியாக தெரியாது. இரண்டு போலிசார் இருந்தார்கள். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள கொய்யாத்தோப்பு, ஆவிமரத்திற்கு கோபால்பட்டியிலிருந்து நத்தம் போகும் போது 6 கீமீ தள்ளி ரோட்டின் இடதுபுறம் இருந்தது. ரோட்டிலிருந்து 500 மீட்டர் தொலைவில் இறந்தவர் தொங்கியதாக சொல்லும் மரம் ஆவிமரம் இருந்தது. இறந்தவர் கிடந்த ஆவிமரம் வரை நான்கு சக்கர வாகனத்தில் செல்ல முடியுமா என்றால் நான்கு சக்கர வாகனம் செல்லும் இடத்தில் சுமார் 250 மீட்டர் வரை செல்லலாம். அதன் பிறகு 2 சக்கர வாகனத்தில் செல்லலாமா என்றால் தண்ணீர் இருப்பதால் நடந்து தான் செல்ல முடியும். நான் சம்பவ இடத்திற்கு 04.00மணிக்கு சென்று 05.00மணி வரை இருந்தேன். அந்த 05.00மணி வரையும் போலிசார் இருந்தார்கள். இறந்தவரை ஆம்புலன்சில் அனுப்பவில்லை. 14.05,.2023 மாலை 04.00மணிக்கு நான் , தலையாரி, 2 போலிசார் இல்லாமல் 7,8 நபர்கள் இருந்தார்கள். என் அன்றாட அலுவல்கள் குறித்து அலுவல் புத்தகத்தில் எழுதுவது வழக்கம். அவ்வாறு 14.05,.2023 மாலை 04.00மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றதாக அலுவலக குறிப்பில் எழுதியுள்ளேனா என்றால் இல்லை. 16.05.,2023 அன்று எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் , மற்றும் அத்தாட்சி கைப்பற்றியது போன்ற விபரங்களை அலுவலக குறிப்பில் எழுதியுள்ளேனா என்றால் இல்லை. சந்தேகமரணம் என் ஆளுகையில் நடந்திருந்தால் எழுத்து மூலமாக ஆர்.ஐ, மற்றும் தாசில்தாருக்கு தகவல் தெரிவித்து ஒப்புகை வாங்கியுள்ளேனா என்றால் வாட்ஸ் அப் மூலமாக தகவல் சொன்னேன்., ஒப்புகை வாங்கவில்லை. இது சம்மந்தமாக என்னிடம் தனியாக பதிவேடு உள்ளதா என்றால் இல்லை. 14.05.2023 அன்று மாலை 04.00மணிக்கு சந்தேக மரணம் குறித்து சாணார்பட்டி காவல்நிலையத்தில் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் மேல் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னதால் புகார் கொடுக்கவில்லை. 14.05.2023 அன்று மாலை 04.00மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக புகார், வாக்குமூலத்திலோ இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் புகார் அளித்த கண்ணனின் மனைவி 04.45மணிக்குத்தான் சடலத்தை பார்த்து 14.05.2023 அன்று மாலை 07.00மணிக்குத்தான் புகார் கொடுத்ததாக புகாரில் சொல்லியுள்ளார் என்றால் அதன் பிறகு தான் புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டன். 14.05.2023 அன்று மாலை 04.00மணிக்கு இறந்து போனவர் இருந்ததாக இடத்திற்கு நான் உண்மையில் செல்லவில்லை என்றால் சரியல்ல. 16. 05.2023 அன்று நான் கோபால்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கு நான் போவதற்கு முன்பாகவே 1 முதல் 4 எதிரிகளை முன்னரே பிடித்து வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். கோபால்பட்டியிலிருந்து நத்தம் செல்லும் சாலையில் நிழற்குடை உள்ள இடம் வேறு, பேருந்து நிறுத்தம் உள்ள இடம் வேறு என்றால் தெரியாது. கோபால்பட்டிக்கு நத்தம் செல்லும் சாலையின் இடதுபுறம் ஒரு பேருந்து நிறுத்தமும், நத்தத்திலிருந்து கோபால்பட்டி வரும் சாலையில் இடது புரம் ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளை காவல்துறையினர் எந்த பேருந்து நிறுத்ததில் பிடித்து வைத்திருந்தனர் என்றால் குறிப்பாக ஞாபகம் இல்லை. 16.05.2023 அன்று காலை 10.00மணிக்கு அந்த இடத்திற்கு சென்றேன். நான் 10.00மணியிலிருந்து 10.15மணி வரை அந்த இடத்தில் இருந்தேன். வாக்குமூலம் ஏற்கனவே டைப் செய்து வைத்திருந்தார்கள். அதில் எதிரிகளிடம் கையொப்பம்

பெற்றார்கள், நான் கையொப்பம் இட்டேன். அந்த இடத்தில் எந்த காவலர் இருந்தார் என்றால் சார்பு ஆய்வாளர் இருந்தார். பெயர் ஞாபகம் இல்லை. 1வது எதிரியின் வீடான கொரசின்னம்பட்டி என்பது நத்தம் ரோட்டில் 5 கிமீ சென்றால் வரும். 2வது எதிரி ஊருக்கு 11.30மணி வாக்கில் சென்றோம். முதல் விசாரணையில் 15.30 மணிக்கு 3 வது எதிரி வீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ளதற்கு இடைப்பட்ட 4 மணிநேரம் எங்கே சென்றோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் 4வது எதிரி முருகன் கையொப்பம் இட்டாரா என்றால் சரிதான். அ.த.சா.ஆ-6, 8, 10 ஆகியவற்றை யார் எழுதினார்கள் என்றால் போலிசார் எழுதினார்கள். அந்த 3 அத்தாட்சிகளிலும் நான் கையொப்பமிட்டேன். அத்தாட்சியில் காலம் 4ல் உள்ள எழுத்துக்களும், மற்ற காலங்களில் உள்ள கையெழுத்துக்களும் வெவ்வேறாக உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்த ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எந்த காலகட்டத்திலும் 1 முதல் 4 எதிரிகளை நான் பார்த்ததில்லை என்றாலும் இன்று நீதிமன்றத்தில் காவல்துறையினர் சொன்னதன் அடிப்படையில் அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் எதிரிகள் என்ன உடைகள் அணிந்திருந்தனர் என்றால் ஞாபகம் இல்லை. ஏற்கனவே எதிரிகளை மிரட்டி வெள்ளை தாளில் பெறப்பட்ட கையெழுத்துக்களில் காவல் துறையினர் சங்கதிகளை நிரப்பி தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை - இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.16 20:56:29 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.